# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 210/2015**

பெயர்: **ஈஸ்வரமூர்த்தி** நாள்: 02.12.2023

வா.சா.4 – பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

வா.சா.4 - ஈஸ்வரமூர்த்தி - சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 12.09</u>

நான் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் முதன்மை சாட்சியத்தில் கூறியுள்ள விபரங்கள் வாதி கூறிய விபரங்களாகும். வழக்கை கோவிலை அருணாசலம், அர்த்தனாரிகவுண்டர், தாத்து கவுண்டர் மற்றும் அருணகிரி ஆகியோர்கள் ஆதியில் கட்டினார்கள். கோவிலை கட்டிய அருணாசலத்திற்கும், 1ம் பிரதிவாதிக்கும் எந்த உறவுமுறையும் இல்லை. 1ம் பிரதிவாதியின் தாயார் குட்டியம்மாளை தெரியும், குட்டியம்மாளின் கணவர் பெயர் அருணாசலம் ஆகும். வழக்கு கோவிலில் ஒரு பங்குதாரர் குட்டிம்மாளின் கணவர் அருணாசலம் என்று சொன்னால், சரியல்ல. கோவிலின் உரிமைதாரர்கள் வரி கொடுப்பது வழக்கம்தான். கோவிலில் பங்குதாரர்களுக்கு கோவில் வருமானத்தில் இருந்து கடன் கொடுப்பது ஒரு வழக்கம்தான். 1ம் பிரதிவாதி கோவில் கடனாக ரூ.57900/-த்தை திருப்பி கொடுத்துள்ளார் என்று சொன்னால், சரிதான்.

2) 1ம் பிரதிவாதி நாளது தேதி வரை கோவிலுக்கு வரி செலுத்தி வருகிறார் என்றாலும், நான் வழக்கிற்காக அவர் வரி செலுத்தவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும், சரியல்ல. வழக்கு கோவில் சாமி ஊர்வலம் சர்வே எண் 384/6ல் எக்காலத்திலும் செல்லவில்லை என்றால், சரியல்ல. வழக்கு கோவிலை சுற்றி நான்குபுறங்களிலும் தடம் உள்ளது என்றால், சரிதான். அந்த தடம் வழியாகத்தான் சாமி ஊர்வலம் செல்கிறது என்று சொன்னால், சாமி ஊர்வலம் கோவிலுக்கு கிழபுறமாகத்தான் வந்து செல்லும். கோவில் நந்திக்கு முன்பாக காலியிடம் உள்ளது என்று சொன்னால், சரிதான். நந்திக்கும் குட்டியம்மாளின் நிலத்திற்கும் இடையில் காலியிடம் உள்ளது. நந்திக்கு முன்பாக உள்ள காலியிடத்தில்தான் சாமி ஊர்வலம் வருகிறது என்று சொன்னால், சரியல்ல.

3) குட்டியம்மாள் நிலத்தை அவர் இறக்கும் வரையில் குட்டியம்மாளும், அதன் பின்னிட்டு அவருடைய வாரிசுகளும்தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால், சரியல்ல. 11.08.2015 ம் தேதியில் ஏற்பட்ட பிரச்சனை குறித்து எனக்கு நேரடியாக தெரியும். அந்த சமயத்தில் 1 ம் பிரதிவாதி குட்டியம்மாள் நிலத்தில் வேலி அமைத்திருந்தார் என்று சொன்னால், சாமி நிலத்தில்தான் வேலி போட்டிருந்தார். குட்டியம்மாளுக்கு பாத்தியப்பட்ட இடத்தில்தான் 1 ம் பிரதிவாதி வேலி அமைத்திருந்தார் என்றாலும், கோவிலுக்கு சம்பந்தப்பட்ட நிலத்தில் அமைக்கவில்லை என்று சொன்னால், சரியல்ல. சர்வே எண் 384/6 ல் உள்ள நிலமானது ஒருபோதும் கோவிலுக்கு பாத்தியமோ, அனுவப்பட்ட நிலமோ இல்லையென்று சொன்னாலும், அது 1 ம் பிரதிவாதியின் தாயாருக்கு பாத்தியப்பட்ட இடம் என்று சொன்னாலும் சரியல்ல. வேலி அமைத்ததால்தான் பிரச்சனை ஏற்பட்டது என்று சொன்னால், சரிதான்.

4) குட்டியம்மாளுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் 1 ம் பிரதிவாதி வேலி அமைத்ததை நாங்கள்தான் அகற்றி பிரச்சனை செய்தோம் என்று சொன்னால், சரியல்ல. 2 ம் வாதி அருள்குமார் கோவிலின் தர்மகர்த்தா இல்லை என்றாலும், அவர் சொல்லி கொடுத்துதான் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும், சரியல்ல. நான் அருள்குமாரின் நெருங்கிய நண்பர் என்பதால், எனது சாட்சியம் ஏற்கதக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல. வழக்கு கோவிலுக்கு வரவு செலவு கணக்கு புத்தகம் உள்ளது. அந்த புத்தகத்தில் கோவிலுக்கு வரி செலுத்தியவர்கள் விபரம் மற்றும் கடன் பெற்றவர்களின் விபரங்கள் குறிக்கப்பட்டிருக்கும்.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 12.29

ஒப்பம்/ஈஸ்வரமூர்த்தி

ஒப்பம்/திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.